**கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிழக்கு நுகரகம்பலாத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று / தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கிழக்கு நுகரகம்பலாத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு,

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் கடன் கொடுத்தோர் மீதியில் குறிப்பிடப்பட்டுள்ள 29 செயல் திட்டங்களுக்கு உரிய ரூபா.5,120,520 உறுதிப்படுத்தப்பட்ட செலவு சொத்தாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டுள்ள சொத்தாக காட்டப்படவில்லை என்பது. | செலவுகள் உறுதிப்படுத்தப்பட்டு கடன் கொடுத்தோராக இனம் காணப்பட்டுள்ளதால் 2022 ஆம் ஆண்டில் சொத்தாக காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் கடன்பட்டோர் மீதியில் குறிப்பிடப்பட்ட 26 செயல் திட்டங்களுக்கு உரிய ரூபா.4,554,090 உறுதிப்படுத்தப்பட்ட செலவு மானியமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விலைப்பட்டியல் 2023 ஆம் ஆண்டில் கிடைத்துள்ளதால் முதலீடாக மாற்றப்படவில்லை. | கடன்பட்டோராக இனம் காணப்பட்டுள்ளதால் 2022 ஆம் ஆண்டில் மூலதன மானியங்களாக காட்டப்படுதல் வேண்டும். |
| (இ) | LDSP செயல் திட்டத்தின் மூலம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டில் கிடைத்த தொகையில் மேற்கொள்ளப்பட்ட மீண்டெழும் செலவு ரூபா.1,189,008 மீண்டெழும் மானியங்களாக இனம் காணப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | மீண்டெழும் செலவுகள் சரியாக இனம் காணப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா.3,002,463 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் விளம்பரப் பலகை வருமானம் ரூபா.75,222 நிதிக் கூற்றுகளில் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | பிரதேச சபையில் 19 அமைய ஊழியர்களுக்கு உரியதான ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய 03 சதவீதமான ஊழியர் பங்களிப்புத் தொகையான ரூபா.116.204 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | செலவு பேரேட்டிற்கு அமைய மீளாய்வாண்டில் நன்கொடை ரூபா.337,500 ஆக இருந்த போதிலும் விரிவான வருமான கூற்றில் அது ரூபா.639,313 எனக் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்த நன்கொடைகள் களஞ்சியக் கணக்கினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. | -மேற்படி- |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 கணக்கீட்டு விடயங்களுக்கு உரிய நிதிக் கூற்றுக்களுக்கு அமைய பெறுமதி ரூபா.2,174,364,617 இருந்ததுடன் அதற்குரிய அட்டவணைகளுக்கு அமைய அதன் பெறுமதி ரூபா.2,110,062,063 ஆக இருந்ததால் ரூபா.64,302,554 மொத்த வித்தியாசம்காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கையுடன் இணக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 08 கணக்கீட்டு விடயங்களுக்கு உரிய நிதிக் கூற்றுக்களுக்கு அமைய பெறுமதி ரூபா.4,912,000 ஆக இருந்ததுடன் அதற்குரிய ஏடுகளுக்கு அமைய பெறுமதி ரூபா.4,921,080 ஆக இருந்ததால். ரூபா.495,564 வித்தியாசம்காணப்பட்டது. | -மேற்படி- | ஆவணங்கள் நேரொத்த அறிக்கையுடன் இணக்கப்படுதல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேலதிகம் / பற்றாக்குறையில் இனம் காணப்பட்ட மூலதன செலவு மானிய பெறுமதியான ரூபா.3,166,420 ஐக் கணக்கீடு செய்வதற்கு உரியதாக அந்த சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்ட ஆண்டின் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா.15,096,367 பெறுமதியான 06 சொத்து விடயங்களை உறுதிப்படுத்தப்படுவதற்காக விரிவான அட்டவணைகள், மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 | வைப்பு செய்யப்பட்டு 02 வருட காலம் கடந்திருந்த ரூபா.485,500 தொகையான 78 பொது வைப்பு மீதி ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை. | வருமானத்துக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.4,637,749 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.17,445,266 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வழி | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீத வரி மற்றும் வரி | 3,437,000 | 2,436,695 | 1,891,095 | 870,120 | 3,036,000 | 2,036,000 | 2,349,097 | 324,520 |
| (ii) | வாடகை | 10,428,000 | 4,848,201 | 5,124,094 | 1,396,977 | 9,660,875 | 4,460,875 | 5,114,074 | 1,672,870 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 1,565,000 | 1,128,544 | 1,440,705 | 1,111,264 | 1,965,000 | 1,465,000 | 1,215,906 | 1,423,425 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 30,765,620 | 26,517,423 | 35,679,398 | 18,537,872 | 32,006,400 | 32,006,400 | 26,697,887 | 27,699,847 |
| | | 46,195,620 | 34,930,863 | 44,135,292 | 21,916,233 | 46,668,275 | 39,968,275 | 35,376,964 | 31,120,662 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | சபையின் அதிகார பிரதேசத்தில் வீதவரியினை அறவிடுவதற்காக 06 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு இருந்த போதிலும் மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டு வீதவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வீதவரியினை அறவிடுவதற்கான செயல்பாடுகளைத் துரிதப்படுத்துதல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | சபைக்கு சொந்தமான 06 அறைகளுக்காகக் கிடைக்க வேண்டிய ரூபா.84,000 வாடகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் . |
| (ii) | 2022 திசெம்பர் 11 ஆம் திகதியில் சொத்துக்களைக் குத்தகைக்கு வழங்குவதற்காக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய 01 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடையிலான நிலுவை வருமானம் ரூபா.1,199,133 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | -மேற்படி- | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் . |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த விளம்பரப் பலகைக்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் 01 வருடத்திற்கும் 09 வருடத்திற்கும் இடையிலான காலம் தொட்டு அறவிடப்பட்டிருக்க வேண்டிய ரூபா.1,096,719 தொகை ஆகும். | ரூபா.308,817 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

(ஈ) **ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நீதிமன்ற தண்டப் பணம் ரூபா.5,336,813 உம் முத்திரைக் கட்டணம் ரூபா.26,375,504 உம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்தது. | நீதிமன்ற தண்டப் பணம் ரூபா.331,168 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.4,524,888 உம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய சரியான தொகையை உறுதிப்படுத்திக் கொண்டு அறவிடப்படுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள கீரக்குளம் பிரதேசத்தில் பாரிய அளவில் சரளைக் கற்களைக் கொண்டு செல்லுதல் இடம் பெறுவதனால் சபையின் அதிகார பிரதேச வீதிகளுக்கு ஏற்படும் சேதத்தினை இற்றைப்படுத்துவதற்கு கொண்டு செல்லும் சரளைக் கற்களின் மீதான கட்டணத்தை அறவிடும் வழிமுறையினை சபை தயாரித்து இருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சரளைக் கற்களை கொண்டு செல்லுவதால் அதிகார பிரதேசத்தில் உள்ள வீதிகளுக்கு ஏற்படும் சேதத்தினை இற்றைப்படுத்துவதற்கான கட்டணத்தினை அறவிடும் முறைமையினை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையினால் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 3,042,929 ஆன 04 கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு 02 வருடத்திற்கும் 05 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் தொட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இந்த கட்டணத்தினை செலுத்துதல் இடம்பெற்று வருகின்றது. | பழைய மீதிகளை செலுத்தி தீர்த்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான பொருள் கணக்கெடுப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்ட 92 வகை பொருட்களுக்கு உரிய 577 அலகுகளின் குறைபாடுகள் தொடர்பில் குறித்த பிரிவிற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்களை அழைத்து விசாரணை மேற்கொண்டு அந்த நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | விசாரணை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளது. | விசாரணை அறிக்கையை விரைவில் பெற்றுக் கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஏலமிடப்பட்ட காணிகளில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 04 காணிகளை உற்பத்தித் திறனாக பயன்படுத்தாததால் செயலற்று காணப்பட்டது. | குறித்த உத்தியோகத்தர்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளனர். | இந்தக் காணியினைப் பாதுகாப்பதற்கும் உற்பத்தித் திறனாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உக்கக்கூடிய கழிவுகளில் இருந்து இயற்கை உரத்தினை உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் அல்லது மத்திய நிலையம் ஒன்று சபையிடம் காணப்படவில்லை. | கழிவு முகாமைத்துவ செயல்திட்டத்தினைத் தயாரிப்பதற்கான முன்மொழிவு உள்ளூராட்சி திணைக்களத்திடம் அனுப்பப்பட்டுள்ளது. | சபையின் அதிகார பிரதேசத்தில் உருவாகும் உக்கக்கூடிய கழிவுகளை முறையாக அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |